## மார்ச் - 19 - திங்கள்

### தூய சூசையப்பர்

### தூய யோசேப்பு – அன்னை மரியாவின் கணவர்

"கடவுளே! உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும்."– திபா 51:1

### முதல் வாசகம் : 2 சாமுவேல் 7:4 -5, 12 – 14,16

அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது. நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் நான் தங்குவதற்காக எனக்கு ஒரு கோவில் கட்டப்போகிறாயா? உன் வாழ் நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். எனது பெயருக்காக கோவில் கட்டவிருப்பவன் அவனே. அவனது அரசை நான் என்றும் நிலைநிறுத்துவேன். நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறுசெய்யும்போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!

**பதில்பாடல் :** அவர் வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்

### இரண்டாம் வாசகம் : உரோமையர் 4:13,16 –18, 22

சகோதர சகோதரிகளே! உலகமே அவருக்கு உரிமைச் சொத்தாகும் என்னும் வாக்குறுதி ஆபிரகாமுக்கோ அவருடைய வழிமரபினர்களுக்கோ திருச்சட்டத்தைக் கடைப்பிடித்ததால் கிடைக்கவில்லை நம்பிக்கை கொண்டு கடவுளுக்கு ஏற்புடையவர் ஆனதால்தான் அவ்வாக்குறுதி கிடைத்தது. ஆகவே கடவுளின் அருள்செயலால் நம்பிக்கை வாக்குறுதியின் அடிப்படையாயிற்று. இவ்வாறு வாக்குறுதி ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எல்லாருக்கும்-திருச்சட்டத்திற்கு உட்பட்டோருக்கு மட்டுமல்ல, அவரைப்போலக் கடவுள்மீது நம்பிக்கை கொண்டோருக்கும்-உரியது என்பது உறுதியாயிற்று. ஆபிரகாம் நம் அனைவருக்கும் தந்தை. ஏனெனில் "எண்ணற்ற மக்களினங்களுக்கு உம்மை நான் தந்தையாக்கு கிறேன்" என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆம், இறந்தவர்களை வாழ்விப்பவரும் இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவர் முன்னிலையில் ஆபிரகாம் நம் தந்தையானார். "உன் வழிமரபினர் எண்ணற்றவராய் இருப்பர்" என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது. இக்கூற்று நிறைவேறும் என்னும் எதிர்நோக்குக்கு இடம் இல்லாதது போல் தோன்றினும், அவர் எதிர்நோக்கினார் தயங்காமல் நம்பினார். ஆகவே அவர் பலமக்களினங்களுக்குத் தந்தை யானார். ஆகவே "அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்."

### நற்செய்தி: மத்தேயு 1 : 16, 18 – 21, 24

யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு. அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.

**தியானம்:** பரலோக தகப்பன் தனது மாபெரும் இறை திட்டத்திற்கு தமது ஒரே பேறான மகனை கொடுத்து அன்னை மரியாவையும் நீதிமானாகிய சூசையப்பரையும் இறைதிட்டத்தில் இயேவின் பெற்றரோராக தெரிவுசெய்தார். புனித சூசையப்பர் நீதிமானாக இருந்தமையால் மரியன்னையை "இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத்" தீர்மானிக்கும் நிகழ்வானது இத் தவக்காலத்தில் எம்மை ஆழமாகச் சிந்திக்க அழைக்கின்றது. இன்று எம்மத்தியில் நடப்பது போன்றே, புனித சூசையின் காலத்திலும் ஒருசில காரியங்கள் சமூகத்திலே ஏற்றுக்கொள்ள முடியாதவையாக மனிதக் கண்களுக்குத் தென்பட்டன. எனினும், இறைவனின் பார்வையில் அவை வேறுவிதமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த உண்மைகளை எமது அற்ப அறிவால் புரிந்து கொள்வது கடினம். கிறிஸ்தவர்கள் என்று எங்களை அழைக்கும் நாம் இப்போதனைகளுக்கு அமைவாக வாழுகின்றோமா? எமது குடும்பங்களில், அல்லது எமது சமூகத்தில் எத்தனையோ பேரை நாம் இன்னமும் சுட்டிக்காட்டி அவர்களை மன்னிக்காது ஓரம்கட்டி, அல்லது புறம்பே தள்ளி வாழுகின்றோமா? இப்படிப்பட்ட நிலையில் நாம் வாழ்ந்துகொண்டு புனித சூசையப்பருக்கு நவநாள் செய்வதிலும், அல்லது பலிபூசைகளில் பங்குபற்றுவதால் எமது பாவங்கள் மறைக்கப்பட்டு விடுமா? இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையே அன்று படிப்பு அறிவற்ற சாதாரன தச்சன் சூசைக்கும் ஏற்பட்டது. எனினும் இறைவனது திட்டம் வெளிப்படுத்தப்பட்டபோது நீதிமானாக உயர்த்தப்பட்டார். எமது மனித அறிவாலே புரிந்துகொள்ள முடியாத விடயங்களுக்காக அடுத்தவர் செயல்களில் தவறு கண்டுபிடித்து வெறுத்து ஓரம்கட்டுவதனை நிறுத்துவோம். நாமனைவரும் இறைவனின் பார்வையில் சமமானவர்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வோம். எமது சித்தப்படி பிறர் செயலாற்றவேண்டும் என்பதனை விடுத்து மாறாக இறை சித்தப்படி நாம் செயலாற்றுகின்றோமா? என எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். இறுதிநாளில் எமக்குக் கிடைக்க இருக்கும் வெற்றிக் வாக்கை சரியான பாதையில் ஓட முயலுவோம்.